# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## பொருளாதாரச் சேவை விதிப்பனவு
## (திருத்தம்)

**2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்*
*2014, மாச்சு மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2014, மாச்சு மாதம் 10 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ **295 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : 5.00**

2-PL 008071 -350 (2014/03)

## *சட்டப்பயன் பற்றிய கூற்று*

***வாசகம் 2 :*** *இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது காப்புறுதியாளரினால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்து அறவிடப்பட்ட சேவை விதிப்பனவை கழிப்பனவு செய்வதற்கென பொதுக் காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடாத்தும் காப்புறுதியாளரை அனுமதிப்பதற்காகும்.*

***வாசகம் 3 :*** *இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 106 ஆம் பிரிவிற்கிணங்க வரிமதிப்பீடு அல்லது மேலதிக வரிமதிப்பீட்டைச் செய்வதற்கான காலத்தடை ஏற்பாட்டைச் செய்வதாகும்.*

ச.வ.ஒ.7/2014

## 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயரும், நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், 2014, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** இரண்டாயிரத்தெட்டாம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும், (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவதுமான) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, பின்வரும் புதிய உட்பிரிவை அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப்பின்னர் உட்புகுத்துவதன்மூலம் இத்தாற் மேலும் திருத்தப்படுகின்றது :-

''(3அ) நீண்டகாலக் காப்புறுதித் தொழில் மற்றும் பொதுக் காப்புறுதித் தொழில் ஆகிய இரண்டையும் கொண்டுநடாத்துவதில் ஈடுபட்டுள்ள காப்புறுதியாள ரொருவர், 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தச்) சட்டத்தின் 53 ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக, இரண்டு வெவ்வேறு கம்பெனிகளினால் கொண்டுநடாத்தப்பட வேண்டிய நீண்டகாலக் காப்புறுதித் தொழிலாகவும் பொதுக் காப்புறுதித் தொழிலாகவும் அத்தகைய தொழிலைப் பிரிக்குமிடத்து, (1) ஆம், (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவிற்கிணங்கச் செய்யப்பட்ட கழிப்பனவின் பின்னர் சேவை விதிப்பனவாக அறவிடப்பட்ட தொகை

2-PL 008025 -225 (2014/03)

யின் அத்தகைய பிரித்தல் தேதியன்றுள்ளவாறான மீதி ஏதேனுமிருப்பின் அது, இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஆனால் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, அதே கம்பெனியானது தொழிலைத் தொடர்ந்து கொண்டு நடாத்திக்கொண்டிருந்தது என்றாற்போன்று, அத்தகைய பிரித்தலுக்குப் பின்னர் பொதுக் காப்புறுதித்தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** இரண்டாயிரத்தேழாம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

“(4) வரிமதிப்பீடெதுவும் அல்லது மேலதிக மதிப்பீடெதுவும் -

(அ) 7 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தேதிகளில் அல்லது அத்தேதிகளுக்கு முன்னர் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் ஏதேனும் இயைபான காலாண்டுக்காக விபரத்திரட்டொன்றைச் செய்துள்ள ஆளொருவர் அல்லது பங்காண்மையொன்று தொடர்பில் இச்சட்டத்தின்கீழ்,

(i) அத்தகைய காலாண்டு 2014, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதன்முன்னர் முடிகின்ற ஏதேனும் இயைபான காலாண்டாகவுள்ளவிடத்து, அத்தகைய இயைபான காலாண்டு எந்த வரிமதிப்பீட்டாண்டினுள் அடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலிருந்து பதினெட்டு மாதங்கள் முடிவுற்ற பின்னர் ; அல்லது

(ii) அத்தகைய காலாண்டு 2014, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் இயைபான காலாண்டாகவுள்ளவிடத்து, அத்தகைய இயைபான காலாண்டு எந்த வரிமதிப்பீட்டாண்டினுள் அடங்குகின்றதோ அந்த வரி மதிப்பீட்டாண்டினை உடனடுத்து வரும் வரிமதிப்பீட்டாண்டின் நவெம்பர் முப்பதாம் நாளிலிருந்து பதினெட்டு மாதங்கள் முடிவுற்ற பின்னர்,

அவரது அல்லது அதன் வருமான விபரத்திரட்டு 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 106 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்டிருப்பின் ; அல்லது

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறான அத்தகைய தேதியன்று அல்லது அத்தகைய தேதிக்கு முன்னர் விபரத்திரட்டொன்றைச் செய்யத் தவறியுள்ள ஆளொருவர் அல்லது பங்காண்மையொன்று தொடர்பில், அத்தகைய இயைபான காலாண்டு எந்த வரிமதிப்பீட்டாண்டினுள் அடங்குகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டின் நவெம்பர் முப்பதாம் நாளிலிருந்து நான்காண்டு காலப்பகுதியொன்று முடிவுற்ற பின்னர்,

செய்யப்படுதலாகாது.”.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்